[2010 மே 13

இணைப்பு VII

(1050 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

அறிவிப்புகள், 2010–2011

1. கழிவுகள், அதனால் எற்படும் சுற்றச்சூழல் மாசு குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்த, சுற்றுச்சூழலுக்கு ஏற்றதான செயல்முறை விளக்கப்பணிகள் ரூ.3.20 இலட்சத்தில் தேசிய பசுமைப் படை செயல்படும் பள்ளிகள்மூலம் மேற்கொள்ளப்படும்.

2. பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சூழலுக்கேற்ற மறுசுழற்சி காகிதத் தட்டுகள், பைகள், குவளைகள், சணல் பைகள் போன்றவை ரூ.6.00 இலட்சம் செலவில் முதற்கட்டமாக சுய உதவிக் குழுக்கள், சேவை நிறுவனங்கள் மற்றும் பள்ளிகளிடமிருந்து பெறப்பட்டு, முக்கியமான பசுமை தினங்களில் தேசிய பசுமைப் படை மாணவர்கள்மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

3. பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே சுற்றச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் அதனால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மதுரை, கோவை, திருநெல்வேலி, கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஐந்து அரசு (அல்லது) அரசு உதவிபெறும் பள்ளிகளில் ரூ.5.00 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் அமைக்கப்படும்.

4. தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் புதிய அலுவலகங்களை ஏற்படுத்துதல்

தேனி மாவட்டம் தற்பொழுது திண்டுக்கல் மாவட்டத்துடனும், சிவகங்கை மாவட்டம் மதுரை மாவட்டத்துடனும் இணைந்து செயல்பட்டு வருகின்றது. தற்பொழுது உள்ள சூழலில் இம்மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து

2010 மே 13]

கண்காணிக்கும் பணிகளில் சிரமம் இருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டும் மற்றும் நகரத் திடக்கழிவுகள் மேலாண்மை, மருத்துவக் கழிவுகள் மேலாண்மை மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மை சிறப்புற நடைபெறவும், பொது மக்களின் புகார்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும், இந்த நிதி ஆண்டில் தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் புதிய உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களை துவக்க வாரியம் நடவடிக்கை எடுக்கும். இப்புதிய அலுவலகத்தால் இம்மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகளுக்கு துரிதமாக இசைவாணை வழங்கப்படுவதோடு, சுற்றச்சூழல் குறித்த பொது மக்களின் புகார்கள்மீது விரைவாக நடவடிக்கை எடுக்க ஏதுவாகும்.

5. திருப்பூர், வேலூர் மற்றும் ஈரோடு மாவட்ட அலுவலகங்களுக்கு சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) பதவி ஏற்படுத்துதல்

திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுமார் 1360 சலவை மற்றும் சாயப் பட்டறைகள் இயங்கி வருகின்றன. இவற்றால் ஏற்படும் மாசு குறித்து உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற வழக்குகளில் இந்த தொழிற்சாலைகள் கழிவு நீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைப்பாட்டை அடைய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இதனை முழுமையாக செயல்படுத்த வாரியம் கண்காணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. இதனைப் போன்று வேலூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டை, மேல்விஷாரம், ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் சுமார் 490 தோல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவ்வகை தொழிற்சாலைகள், பாலாற்றில் கழிவுநீர் வெளியேற்றத்தை தடுக்கும் பொருட்டு, எதிர்மறை சவ்வூடு பரவல் முறை மற்றும் அடர்கசடு கழிவு மேலாண்மை அமைப்புகளை நிறுவி வருகின்றன. இவற்றை தொழிற்சாலைகள் முறையாக தொடர்ந்து இயக்கி, கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைப்பாட்டை அடைகின்றனவா எனவும், கழிவுநீர் தொட்டிகளில் தேங்கியுள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகளை அகற்றும் பொழுது ஏற்படுகின்ற மனித உயிழப்பை தடுக்கவும் திருப்பூர், ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களைத்

தலைமையிடமாக கொண்டு தக்க வாகன வசதியுடன் கூடிய மூன்று பறக்கும் படைகள் மூன்று சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஏற்படுத்தப்படும். சுற்றுச்சூழல் பொறியாளருக்கு உதவியாக ஒவ்வொரு படையிலும் இரண்டு உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள் இருப்பார்கள். இந்த படைகள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, சுற்றுச்சூழல் சட்டங்களை நடைமுறைப்படுத்தாத தொழிற்சாலைகள்மீது உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளும். இதனால் நீர் நிலைகளுக்கு ஏற்படும் மாசு பெருமளவில் குறையும்.

6. வாரிய அலுவலகத்தில் தொழிற்சாலைகளுக்கான தொடர் காற்று கண்காணிப்பு மையத்தை ஏற்படுத்துதல்

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம், புது டெல்லியில் உள்ள தொழில்நுட்பக் கழகத்தின் துணையுடன் இந்தியா முழுவதும் சுமார் 88 தொழிற்பகுதிகள்/இடங்களை மாசுபட்ட பகுதிகளாக அறிவித்துள்ளது. அவற்றுள் 7 இடங்கள் தமிழகத்தில் உள்ளன. அவை மணலி, கடலூர், இராணிப்பேட்டை, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் மேட்டூர் ஆகும். இவற்றில் மணலி, கடலூர், இராணிப்பேட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 இடங்கள் அதிக மாசுபட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் மாசினைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், முதற்கட்டமாக 4 அதிக மாசுபட்ட பகுதிகளான மணலி, கடலூர், இராணிப்பேட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கும் தொழிற்சாலைகளினால் ஏற்படும் மாசினைக் குறைப்பதற்கான கருத்துருவினை தயாரித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வாரியம் மணலியில் உள்ள பெரிய தொழிற்சாலைகள் தங்களது தொழிற்சாலைகளைச் சுற்றி தொடர் காற்று கண்காணிப்பு அமைப்பு மற்றும் புகைபோக்கியில் தொடர் காற்று கண்காணிப்பினை கணினியின் உதவியுடன் ஏற்படுத்த நடவடிக்கையினை எடுத்துள்ளது. இத்தொடர் கண்காணிப்பு அமைப்பின் விவரங்கள் தொடர்ந்து தெரிந்து கொள்ளும் வசதி தற்பொழுது வாரியத்தில் இல்லை. வெளிநாடுகளில் இவ்வகையான வசதிகளால் தொழிற்சாலைகளை அலுவலகத்திலிருந்து காற்றின் தன்மையினை கண்காணிக்க முடிகின்றது. ஆகவே, முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் மணலி பகுதியில் உள்ள அனைத்து

2010 மே 13]

தொழிற்சாலைகளில் உள்ள தொடர் கண்காணிப்பினை கணினியின் உதவியுடன் மணலி பகுதியில் உள்ள காற்றின் தன்மையினை உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில் 24 மணி நேரமும் இயங்கும் காற்று கண்காணிப்பு மையத்தை (Air Quality Control) வாரிய அலுவலகத்தில் ரூ.10 இலட்சம் செலவில் ஏற்படுத்த வாரியம் நடவடிக்கை எடுக்கும். இது மேலாளர் (ஆய்வகம்) தலைமையில் கண்காணிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக கடலூர், இராணிப்பேட்டை, தூத்துக்குடி மற்றும் இதர பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு இப்பணிகள் விரிவுபடுத்தப்படும்.

7. மண்டல அளவில் மாவட்ட அலுவலகங்களை கண்காணிக்க இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகங்கள் ஏற்படுத்துதல்.

வாரியத்தில் உள்ள 28 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 14 ஆய்வகங்களில் செயல்பாடுகள் மற்றும் அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் கண்காணிப்பு போன்றவை தற்பொழுது வாரிய அலுவலக உயர் அதிகாரிகளால் செய்யப்படுகின்றன. வாரிய அலுவலகத்தில் உள்ள வேலைப் பளு காரணமாக தமிழகத்திலுள்ள 28 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்களில் கண்காணிப்பினைச் சீரமைக்கவும், பெரிய தொழிற்சாலைகளை உயர் அதிகாரிகள் உடனடி திடீர் ஆய்வு மேற்கொள்ளுதல், மாவட்ட ஆய்வக அலுவலக அனைத்து நிருவாக நடைமுறைகளை மேற்பார்வையிடுதல், மண்டல அளவில் பொது மக்கள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாயிகள் ஆகியோரது குறைகளைத் துரிதமாக தீர்க்க நடவடிக்கை எடுத்தல், திடக் கழிவு மேலாண்மை மற்றும் மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளை சரிவர நிருவகித்தல் போன்றவை செய்ய ஏதுவாக, தமிழகத்தில் உள்ள 28 மாவட்ட அலுவலகங்களை 5 புதிய மண்டலங்களில் உள்ளடக்கி ஒவ்வொரு மண்டலத்தையும் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தும்.

1. இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு)
2. உதவி சுற்றச்சூழல் பொறியாளர்
3. துணை மேலாளர் (ஆய்வகம்)
4. சுருக்கெழுத்து தட்டச்சர்

[2010 மே 13

இவ்வலுவலகங்கள், சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூரில் அமைக்கப்பட்டு வாகனமும் வழங்கப்படும்.

இவ்வலுவலகமானது தலைவரின் நேரடி பார்வையில் இயங்குவதோடு பெரிய வகை சிவப்பு தொழிற்சாலைகள், புகார் பெறப்படும் தொழிற்சாலைகள், பொது மக்கள் மற்றும் முதலமைச்சர் அவர்களின் சிறப்புப் பிரிவிலிருந்து பெறப்படும் புகார்களை ஆய்வு செய்வதோடு ம்ண்டல அளவில் நீர் நிலைகள், நிலம் மற்றும் காற்று மாசுபடாமலிருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

8. வாரியத்தில் ஊழல் தடுப்புப் பிரிவினை ஏற்படுத்துதல்

மாவட்ட அளவில் சுற்றுச்சூழல் நிருவாகம் திறம்படவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் செயல்படுவதற்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் ஏற்படுத்துதல் அவசியமாகிறது. இந்தப் பிரிவானது மாநிலம் முழுவதும் உள்ள வாரியத்தின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள்மீது பெறப்படும் புகார்களைத் துரிதமாகவும், குறித்த நேரத்திலும் விசாரணை செய்யும். எனவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினை ஏற்படுத்தவும், அதற்கு அயற்பணிமூலம் ஒரு கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில், அவருக்கு உதவியாக காவல் துறையிலிருந்து அயற்பணி மூலமாக ஒரு துணை காவல் துறைக் கண்காணிப்பாளரும், அவர்களுக்கு துணையாக போதிய பணியாளர்கள் மற்றும் தேவையான வசதிகளைக் கொண்டதாகவும் அமைக்கப்படும். இப்பிரிவானது தலைவர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவர்களின் நேரடிப் பார்வையில் இயங்குவதோடு, புகார் மற்றும் இதர முறைகேடுகளை மந்தண முறையில் விசாரித்து உரிய திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

9. நுண்துகள்கள் காற்று மாசு கண்காணிப்பு மேம்பாடு

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் நாட்டின் சுற்றுப்புற காற்றுத் தரத்தை மேம்படுத்துவதற்காக கடுமையாக்கப்பட்ட தேசிய காற்றுத் தர அளவுகளை 18-9-2009 முதல் நிர்ணயித்துள்ளது.

2010 மே 13]

இத்தகைய புதிய காற்றுத் தர அளவுகளுக்கு ஏற்ப நுண்துகள்கள் காற்று மாசு கண்காணிப்பு திறனை மேம்படுத்த சுமார் ரூ.*45* இலட்சம் செலவில் கூடுதல் காற்று மாசுபட்ட பகுதிகளான மணலி மற்றும் கோயம்புத்தூர் ஆய்வகங்களுக்கு தலா *7* எண்ணிக்கை PM_{10} மற்றும் *5* எண்ணிக்கை $PM_{2.5}$ காற்று மாதிரி சேகரிப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்களை வாங்கிச் செயல்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS